# மூன்றாம் இடைப் பருவத் தேர்வு - 2025

## தமிழ்

நேரம் : 1.30 மணி | மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 8X1=8

1. ஒன்றே ------- என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.
அ) குலம் ஆ) குளம் இ) குணம் ஈ) கூடம்

2. கல்வியோடு -------- கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.
அ) சிலம்பமும் ஆ) கைத்தொழிலும் இ) இதழியல் பட்டறிவு ஈ) தொழிற்புலமை

3. உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------
அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும் இ) உளிருக்கும் ஈ) உளருக்கும்

4. அசை ------- வகைப்படும்.
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

5. ஆண்மையின் கூர்மை -------
அ) வறியவருக்கு உதவுதல் ஆ) பகைவருக்கு உதவுதல்
இ) நண்பனுக்கு உதவுதல் ஈ) உறவினருக்கு உதவுதல்

6. அடுத்தவர் வாழ்வைக் கண்டு -------- கொள்ளக் கூடாது.
அ) உவகை ஆ) நிறை இ) அழுக்காறு ஈ) இன்பம்

7. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது -------
அ) வானம் ஆ) கடல் இ) மழை ஈ) கதிரவன்

8. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ---------
அ) இராதாகிருஷ்ணன் ஆ) அம்பேத்கர் இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

பகுதி - II பிரிவு–I

**ஏவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3X2=6

9. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?
10. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
11. தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?
12. தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.
13. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?



SATGURU STUDY CENTRE
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
NEVER STOP LEARNING.NEVER STOP GROWING...

பிரிவு – II

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3X2=6

14. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.

மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.

15. இருவகை அசைகளையும் விளக்குக.

16. அறம் சார்ந்த உங்கள் பொறுப்புகள் இரண்டினை எழுதுக.

17. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

18. கலைச்சொல் எழுதுக.

அ) Saint ஆ) Integrity

பகுதி - III பிரிவு – I

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக. 3x3=9

19. மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?

20. அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?

21. தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?

22. மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

23. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

பிரிவு – II

அடிபிறழாமல் எழுதுக. 3+2=5

24. "ஒன்றே குலமும் ....." எனத் தொடங்கும் ஒன்றே குலம் பாடலை எழுதுக.

25. "நவில்தொறும்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பகுதி – IV பிரிவு – I

26. கடிதம் எழுதுக. 1x4=4

புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினார் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

பிரிவு – II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2x6=12

27. மனித யந்திரம் கதையை மீனாட்சி சுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக.

28. ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்க வேண்டிய உயர்பண்புகள் யாவை?

29. பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.



SATGURU STUDY CENTRE
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
NEVER STOP LEARNING.NEVER STOP GROWING...